## அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவர்களுக்கு உதவிகள்!

# கொளத்தூர் - கபாலீசுவரர் கலை, அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் - நல உதவிகள்!

## கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பித்தார்!

சென்னை, ஆக. 2 -

**கொளத்தூர், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் மூக்குக் கண்ணாடிகளையும், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி, கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் பகிர்ந்த பணியிடத்திற்கான (CoWorking Space) கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.7.2024 அன்று சென்னை, கொளத்தூர், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 748 மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், 3 உதவிப் பேராசிரியர்கள், ஒரு உடற்கல்வி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளையும், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் உதவிகள் கோரி மனுக்கள் அளித்த 147 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கினார். மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கொளத்தூரில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் பகிர்ந்த பணியிடத்திற்கான கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், 3 உதவிப் பேராசிரியர்கள், ஒரு உடற்கல்வி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்குதல்**

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் சமூக நோக்கோடு செயல்படும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் திருக்கோயில்களின் சார்பில் 25 பள்ளிகளும், 10 கல்லூரிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 22,247 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

முதலமைச்சர் அவர்களால் 2.11.2021 அன்று சென்னை, கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டன. இக்கல்லூரியில் B.Com., B.B.A., B.C.A., B.Sc. Computer Science, B.A., சைவ சித்தாந்தம் ஆகிய 5 பாடப் பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகிறது. இக்கல்லூரி தொடங்கப்பட்ட 2021 ஆம் ஆண்டில் முதலமைச்சர் அவர்கள் 240 மாணவ, மாணவிகளுக்கு கல்வி கட்டணம் ரூ.10,000 மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார். அதனைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டில் 480 மாணவ, மாணவியருக்கும், 2023 ஆம் ஆண்டில் 685 மாணவ, மாணவியருக்கும் கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகள் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக, நான்காம் ஆண்டாக, முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் இக்கல்லூரியில் பயிலும் 748 மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணம் ரூ.10,000/ மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், இக்கல்லூரிக்கு தொகுப்பூதியத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள 3 உதவிப் பேராசிரியர்கள், ஒரு உடற்கல்வி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

**அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவ, மாணவியர்களுக்கு உதவிகள் வழங்குதல்**



பெரியார் நகர் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயின்ற 355 மாணவ, மாணவியருக்கு தையல் இயந்திரங்கள், 125 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகள் மற்றும் 1000 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

திரு.வி.க.நகர் மண்டலம், ஜவஹர் நகரில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை, பயனாளிகளுக்கு மருத்துவத் உதவித் தொகை, திருமண உதவித் தொகை, அரவை இயந்திரங்கள், மூன்று சக்கர வண்டிகள், காது கேட்கும் கருவிகள் என மொத்தம் 147 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**கொளத்தூரில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில்**

**ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் பகிர்ந்த பணியிடம் கட்டுமானப் பணிகளை பார்வையிடுதல் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மற்றும் மறுவாழ்வு மையம்**

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கொளத்தூர், ஜெகந்நாதன் தெருவில், 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையக் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த மறுவாழ்வு மையக் கட்டடத்தின் தரைதளத்தில் நியாயவிலைக் கடைகள், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், மின்தூக்கி மற்றும் வரவேற்பு அறையும், முதல் தளத்தில் 5 ஆலோசனை அறைகள், மருந்தகம், நோயாளிகளுக்கான காத்திருப்புப் பகுதி, நிர்வாகப் பகுதியும், இரண்டாவது தளத்தில் இயன்முறை மருத்துவம் (பிசியோதெரபி), உடற்பயிற்சி கூடம், அல்ட்ராசவுண்ட் மெழுகு சிசிச்சை மற்றும் 3 எலக்ட்ரோதெரபி அறைகள் உள்ளிட்ட உடற் சிகிச்சைக்கான வசதிகள், நடமாடும் எக்ஸ்ரே வசதியும், மூன்றாம் தளத்தில் டயாலிசஸ் சிகிச்சைக்கான அத்தியாவசிய வசதிகள், தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்கான

2 தனிப் படுக்கைகள், நோயாளிகளின் சிகிச்சைக்காக 11 படுக்கைகளும், நான்காவது தளத்தில் செயற்கை மூட்டு மையம், நோயாளிகளுக்கு பிரத்யேக செயற்கை உறுப்புகள் பொருத்தும் இடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

**பகிர்ந்த பணியிடம்**

அதனைத் தொடர்ந்து, கொளத்தூர், ஜெகந்நாதன் தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு வரும் பன்னோக்கு மையத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் இணைந்து 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் பகிர்ந்த பணியிடத்திற்கான (Coworking Space) கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்புதிய பகிர்ந்த பணியிடத்தில் 90 இருக்கைகள் கொண்ட நவீன பணியிடம், கூட்டரங்கம், பணியாளர் கலந்துரையாடல் அறைகள், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆலோசனைக் கூடம், உணவு அருந்தும் இடம், ஓய்வறை, வைபை மற்றும் இணைய வசதி, உடைமைகளை வைப்பதற்கான பாதுகாப்பு வசதிகள், அச்சு மற்றும் ஸ்கேனிங் வசதிகள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சி.எம்.டி.ஏ., முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மத்திய வட்டார துணை ஆணையர் கே. ஜெ.பிரவீன் குமார், இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் விஜயகுமார், இந்து சமய அறநிலையத் துறை பள்ளி மற்றும் கல்லூரி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், எவர்வின் பள்ளி முதல்வர் புருஷோத்தமன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் பங்கேற்பு!

# நாகையில் 11 புதிய பேருந்துகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

நாகை, ஆக. 2 -

நாகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் நாகை மண்டலத்தில் புதிய பேருந்துகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கொடி அசைத்து வைத்து தொடங்கி வைத்தார்.

நாகை புதிய பேருந்து நிலையத்தில் 11 புதிய பேருந்து தொடங்கி வைக்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் முன்னிலை வகித்தார். விழாவில் நாகையில் இருந்து 11 புதிய பேருந்துகளை சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கொடி அசைத்து வைத்து தொடங்கி வைத்து பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு ஏழை, எளிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக போக்குவரத்துத் துறையில் புதிய பேருந்துகள், புதிய வழித்தடங்கள், இணைய தள முன்பதிவு வசதி, நவகிரக சுற்றுலா பேருந்து போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவது மட்டுமில்லாமல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சிப்பொறுப்பு ஏற்ற உடனே பெண்களுக்கு இலவச பேருந்து பயணத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயல்படுத்தினார்கள். நாகை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் இப்போது நாகையை தலைமையிடமாக கொண்டு 11 பணிமனைகள் மூலம் 541 பேருந்துகளை இயக்கி நாகை, திருவாரூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்ட பொதுமக்களுக்கு சேவை செய்து வருகிறது. நாகை மற்றும் வேதாரண்யம் ஆகிய இரண்டு பணிமனைகளை உள்ளடக்கிய நாகை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 79 புறநகர் பேருந்துகள், 22 நகர பேருந்துகள் 49,257 கி.மீ. இயக்கப்பட்டு 75,439 பயணிகள் பயனடைந்து வருகின்றனர். இதில் 20,844 மகளிர் பயணிகளும், 62 மாற்றுத்திறனாளிகளும், 4 மாற்றுத்திறனாளி உதவியாளர்களும், 10 திருநங்கை பயணிகள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும் கட்டணமின்றி பயணம் செய்து வருகின்றனர். நாகை மாவட்டத்திற்கு உட்பட்ட இரண்டு பணிமனைகளுக்கும் புதிய மற்றும் கூண்டு புனரமைக்கப்பட்ட 23 பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது 13 பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளது. தற்போது நாகை மாவட்டத்தில் 7 பேருந்துகளும், இதர மாவட்டங்களில் 4 பேருந்துகளும் என 11 பேருந்துகள் இயக்கப்படுகிறது. இந்த புதிய பேருந்துகள் பொதுமக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் தினசரி பணிகளுக்கு செல்வோருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இவ்வாறு தமிழ்நாடு மக்களுக்கு நலன் பயக்கும் வகையில் தமிழ்நாடு அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி பேசினார்.

விழாவில் சட்ட மன்ற உறுப்பினர்கள் முகமதுஷா நவாஸ், நாகைமாலி, மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோக நாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், என்.சதாசிவம், கே.பழனியப்பன், உதயம் வே.முருகையன், சிக்கல் என்.ஆனந்த், குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் ராஜசேகர், மேலாண்மை இயக்குநர் மகேந்திரகுமார், நாகை ஒன்றியக் குழு தலைவர் அனுசியா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், சத்தியமூர்த்தி, பாலமுரளி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கணேசன், மோகன்தாஸ், நாகை நகரக் கழக நிர்வாகிகள் பி.திலகர், வெற்றிலை கடைசிவா, சித்திரா குலோத்துங்கன், அபுபக்கர், நகர்மன்ற உறுப்பினர் சத்தியவாணி கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


### பெருநகர சென்னை மாநகராட்சி
### மின்துறை

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1 / 2761 / 2023

**குறுகிய மறு ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**Rate Contract for supply of 50 No's of Desktop Computers, 50 No's Laser Printers, 50 No's of UPS and 10 No's Laptops with 5 Years onsite warranty / support for GCC users for a period of 6 months -** க்கான ஒப்பம்.

**பணியின் மதிப்புத் தொகை ரூ.56,20,906/-** | **ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ.56,209/-**

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **12.08.2024 அன்று பிற்பகல் 3.00 மணி.**

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **13.08.2024 அன்று பிற்பகல் 3.15 மணி**

செ.ம.தொ.இ / 2726 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**


# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த க.செ.மணிமாறன், மு.க.திருமுருகன் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 31.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொ. தனசேகரன்

**ஆகஸ்ட் 2 (2015)**



**தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, வேளச்சேரி பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டில் வேளச்சேரி கிளைக் கழகப் பொருளாளராகப் பொறுப்பு வகித்த இவர், தாமஸ்மலை ஒன்றியப் பிரதிநிதி, வேளச்சேரி வட்டச் செயலாளர், வேளச்சேரி பகுதிச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றினார்.**

**1996–ல் சென்னை மாநகராட்சி 153–வது வார்டில் கழகத்தின் சார்பில் மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களை நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**